தினமணி

## பார்த்தீனிய செடிகள் ஒழிப்பு தீவிரம்

First Published : 21 Jun 2012 11:00:52 AM IST

தருமபுரி, ஜூன் 20: ஏ.ஜெட்டிஹள்ளி ஊராட்சிக்குள்பட்ட பகுதிகளில் பார்த்தீனிய களைச் செடிகள் ஒழிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தருமபுரியை அடுத்துள்ள இந்த ஊராட்சிக்குள்பட்டு வள்ளுவர்நகர், ராயல் நகர், சக்திநகர், ஓட்டுநர் காலனி, என்ஜிஜிஓ காலனி, ஒட்டப்பட்டி, தேங்காய்மரத்துப்பட்டி, செட்டியூர், காமராஜ்நகர், ஏ.ஜெட்டிஹள்ளி ஆகிய பகுதிகள் உள்ளன. இந்தப் பகுதிகளில் சாலையின் இருபுறங்களிலும் பாரத்தீனிய களைச் செடிகள் வளர்ந்து சுகாதாரக்கேடுக்கும், மண்வளத்தை சிதைக்கும் வகையில் உள்ளதால் இவற்றை அகற்ற ஊராட்சி நிர்வாகம் முடிவு செய்தது.

சுமார் 6 கி.மீ. தொலைவுக்கு வளர்ந்துள்ள இந்தச் செடிகளை மனித ஆற்றல் மூலம் அகற்றினால் காலவிரயம் ஏற்படுவதால், துரித நடவடிக்கையாக அகற்ற ஊராட்சி நிர்வாகத்தால் புஷ்கட்டர் எனும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி கடந்த ஒரு வாரமாக ஊராட்சிக்குள்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் பார்த்தீனிய களைச் செடிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து ஊராட்சி மன்றத் தலைவர் எம். சரவணன் கூறியது:

ஊராட்சிக்குள்பட்டு 9-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இதுவரை 3 கி.மீ. தொலைவுக்கு வளர்ந்திருந்த பார்த்தீனிய செடிகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து அழிக்கும் பணி நடைபெறும். இந்த வார இறுதிக்குள் ஊராட்சிக்குள்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் பார்த்தீனிய களைச் செடிகள் அழிக்கப்பட்டுவிடும் என்றார் அவர்.

## செம்மறி ஆடு வளர்ப்புப் பயிற்சியில் பங்கேற்க அழைப்பு

First Published : 21 Jun 2012 12:14:29 PM IST

கரூர், ஜூன் 20: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ள செம்மறி ஆடு வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த மையத்தின் தலைவர் செந்தில்வேல் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் செம்மறி ஆடு குறித்த ஒரு மாத சுயவேலைவாய்ப்புப் பயிற்சியை ஆண்டுக்கு 4 முறை நடத்துகிறது.
இந்தப் பயிற்சியை பெற்ற பிறகு செம்மறி ஆடு வளர்ப்பில் அறிவியல் தொழில்நுட்பங்களை அறிந்து, இந்தத் தொழிலை மேற்கொள்வதன் மூலம் சுயவேலைவாய்ப்பைத் தொடங்கலாம்.

நிகழாண்டிற்கான பயிற்சி வருகிற ஆகஸ்ட், நவம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது.
எழுதப் படிக்கத் தெரிந்த அனைவரும் பயிற்சியில் சேரலாம். பயிற்சி கட்டணமாக ரூ. 500 செலுத்த வேண்டும். மேலும், விவரங்களை பயிற்சி மையத்தில் தெரிந்துகொள்ளலாம்.

## பசுமை வீடுகளை விரைந்து கட்ட உத்தரவு

First Published : 21 Jun 2012 12:29:18 PM IST

திருவாரூர், ஜூன், 20: திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பசுமைத் திட்ட வீடுகளைக் குறித்த காலக்கெடுவுக்குள் கட்டி முடிக்க வேண்டுமென உத்தரவிட்டார் ஆட் சியர் சி. நடராசன்.

வலங்கைமான் வட்டம், கோவிந்தகுடி ஊராட்சியில் 5 வீடுகள், சந்திரசேகரபுரம் ஊராட்சியில் 5 வீடுகள், வேலங்குடி ஊராட்சியில் 5 வீடுகள், ஏரி வேளூர் ஊராட்சியில் 5 வீடுகள், மாளிகைத் திடல் ஊராட்சியில் 5 வீடுகள் சூரிய சக்தியுடன் கூடிய பசுமைத் திட்டத்தில் தலா ரூ. 1,80 லட்சத்தில் என 25 வீடுகள் ரூ. 45 லட்சத்தில் கட்டப்படுகின்றன.

இந்த வீடுகளை புதன்கிழமை ஆட்சியர் சி. நடராசன் ஆய்வு செய்தபோது, வீட்டு உரிமையாளர்களிடம் அரசு நிர்ணயித்த அளவுக்குள் குறித்தக் காலத்தில் வீடுகளை கட்டி முடிக்க வேண்டுமென உத்தரவிட்டார்.
உதவிப் பொறியாளர் பன்னீர்செல்வம், வட்டார வளர்ச்சி அலுவலர் எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் உடனிருந்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## முட்டை விலை 324 காசாக உயர்வு

ஜூன் 22,2012,03:24



நாமக்கல்:நாமக்கல்லில் நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டை விலையை, 2 காசுகள் உயர்த்தி, 324 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.வரலாறு காணாத விலை உயர்வால், உணவகங்களில் "ஆம்@லட்' உள்ளிட்ட முட்டை உணவு பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்:சென்னை 331 காசுகள், பெங்களூரு 322 காசுகள், மைசூரு 322 காசுகள், ஹைதராபாத் 301 காசுகள், மும்பை 333 காசுகள் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 54 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 76 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## தேங்காய் பருப்பு விலை உயர்வு ப.வேலூர் விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2012,01:01 IST

கருத்தை பதிவு செய்ய

ப.வேலூர்: ப.வேலூர் உழவர் சந்தை வளாகத்தில் நடந்த தேங்காய் பருப்பு ஏலத்தில், அவற்றுக்கு நல்ல விலை கிடைத்ததால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். ப.வேலூர், சுல்தான்பேட்டையில் உழவர்சந்தை உள்ளது. வாரந்தோறும் வியாழக் கிழமையன்று, அங்கு

தேங்காய் பருப்பு ஏலம் நடைபெறுவது வழக்கம். ப.வேலூர் அதன் சுற்றுவட்டார விவசாயிகள், தேங்காய் பருப்புகளை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்வர்.
அதன்படி, நேற்று சுல்தான்பேட்டை உழவர்சந்தை வளாகத்தில் தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது. சேலம், கரூர் போன்ற வெளி மாவட்டம் மற்றும் நாமக்கல் மாவட்டம் முழுவதும் உள்ள வியாபாரிகள், ஏலத்தில் பங்கேற்று, தேங்காய் பருப்புகளை ஏலத்தில் எடுத்தனர்.
போட்டி அதிகமாக இருந்ததால், கடந்த வாரம், 25 முதல் 35 ரூபாய் வரை விற்பனையான ஒரு கிலோ தேங்காய் பருப்பு, இந்த வாரம், 35 முதல், 40 ரூபாய் என, விலை அதிகரித்தது. விலை உயர்வால், ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 324 காசாக நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2012,01:05 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 324 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 322 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை இரண்டு காசுகள் உயர்த்தி, 324 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டையின் வரலாறு காணாத விலை உயர்வால், ஹோட்டல் உள்ளிட்ட உணவகங்களில் ஆம்லெட், ஆப்பாயில் போன்ற முட்டை வகை உணவுப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: சென்னை, 331 காசுகள், பெங்களூரு, 322 காசுகள், மைசூரு, 322 காசுகள், ஹைதராபாத், 301 காசுகள், மும்பை, 333 காசுகள், விஜயவாடா, 303 காசுகள், கோல்கத்தா, 345 காசுகள், பார்வாலா, 290 காசுகள், டில்லி, 300 காசுகள்.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 54 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 76 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தினகரன்

## பாசனத்திற்கு தண்ணீர் திறக்க உறுதி குரும்பூர் விவசாயிகள் மறியல் வாபஸ்

பதிவு செய்த நேரம்:2012-06-21 11:09:00

திருச்செந்தூர்: கடம்பாகுளம் பாசனத்திற்குட்பட்ட 7, 8, 9வது மடைகளின் கீழுள்ள ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தண்ணீரின்றி தற்போது நெற்பயிர் காய்ந்து வருவதால் மணிமுத்தாறு அணையில் இருந்து ஸ்ரீவைகுண்டம் தென்கால் கடம்பாகுளத்திற்கு தண்ணீர் வழங்க கோரியும் தூத்துக்குடி மாவட்டத்தை புறக்கணிக்கும் பொதுப்பணித்துறையை கண்டித்தும் கடம்பாகுளம் பாசன விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழக உழவர் முன்னணி சார்பில் நெல்லை மெயின் ரோட்டில் புறையூர் பஸ் நிறுத்தம் அருகே நேற்று மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்திய கம்யூ. மாவட்ட செயலாளர் மோகன்ராஜ், தமிழக உழவர் முன்னணி மாவட்ட அமைப்பாளர் தமிழ்மணி தலைமையில் புறையூர் ஊராட்சி தலைவர் செல்வகுமார், தென்திருப்பேரை பேரூராட்சி தலைவர் ராமஜெயம், தமிழ்நாடு விவசாயகள் சங்கத்தலைவர் ராமையா, செயலாளர் நல்லையா, கல்லாம்பாறை விவசாய சங்க தலைவர் ரத்தினம், குரும்பூர் நகர திமுக செயலாளர் விஜய், ஊர் தலைவர்கள் மற்றும் 300க்கு மேற்பட்ட விவசாயிகள் திரண்டனர்.இதையடுத்து ஏடிஎஸ்பி சாமிதுரைவேலு தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். தாசில்தார் வள்ளிகண்ணு, பொதுப்பணித்துறை உதவி பொறி யாளர் கங்காதரன், உதவி பொறியாளர் வினோத் குமார், விஏஓ ஜெயகுமார்ஆதித்தன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து நெல்லை தாமிரபரணி வடி நில கோட்ட பொறியாளர் சந்திரசேகரனிடம் தொலைபேசியில் தெரிவித்தனர். அவர் 2 நாளில் தண்ணீர் திறந்துவிடுவதாக உறுதியளித்ததின் பேரில் போராட்டத்தை கைவிட்டு சென்றனர்.